# CHENNAI VIDEO PHOTOGRAPHER'S ASSOCIATION
# சென்னை வீடியோ - புகைப்பட கலைஞர்கள் சங்கம்

Regd No. : 446/96

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002.
E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in
✆ : 2860 7821,Cell : 7824034734

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | P.R.O |
|---|---|---|---|
| S.செல் செல்வம் | D.M. பிரேம்குமார் | K. ஜெயபால் | N. ரவிக்குமார் |
| 9941867744 | 9884002779 | 9381090329 | 9841272071 |


Date : 16/08/2023

## 26 ஆவது பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களின் விபரம்

1. செயலாளர் அறிக்கையில் இடம் பெற்றிருந்த முன்னாள் செயலாளர் துரைபாபு அவர்களின் பெயரை செயலாளர் அறிக்கையில் இருந்து நீக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

2. பொருளாளர் அறிக்கையில் 2017,2018 ,2019 ஆண்டிற்கான வாராக்கடன் தள்ளுபடி செய்ததை பொதுக்குழுவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பழைய கணக்கில் உள்ளபடி அது அப்படியே இருக்கட்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

3 . மாற்றுத்திறனாளிகளுக்கு சந்தா கட்டணத்தில் 5 0 சதவீதம் சலுகை வழங்கும் தீர்மானத்திற்கு இப்பொதுக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

4. சங்கத்தில் உள்ள மகளிர் மற்றும் மூன்றாம் பாலினத்தவருக்கு சந்தா தொகையில் 30 சதவீதம் சலுகை வழங்க ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5. சங்கத்தில் புதியதாக இணையும் உறுப்பினர்கள் கட்டணம் 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாக மாற்றி அமைக்கவும், ரெனிவல் செய்யும் உறுப்பினர்கள் கட்டணம் 750 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக உயர்த்துவதுடன், புதிய ஆயுட்கால உறுப்பினர் சந்தா தொகை 6000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தி வாங்கும் முறையை செயல்படுத்துவது தொடர்பாக ஒப்புதல் பெறப்பட்டது. இனி மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆயுட்கால உறுப்பினர்கள், புதிய உறுப்பினர்கள், ரெனிவல் செய்யும் உறுப்பினர்கள் சந்தா தொகையை 25 சதவீதம் உயர்த்துவது தொடர்பாக ஒப்புதல் பெறப்பட்டது.

6. ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக உயர்த்தி வழங்க பொதுக்குழுவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

7. தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ரெனிவலில் உள்ளவர்களுக்கு மட்டும் 30,000 ரூபாய் ஈமச்சடங்கு தொகை வழங்கப்படும், இத்திட்டத்தில் உறுப்பினர் மூன்றாண்டு ரெனிவளில் ஒரு காலாண்டு விடுபட்டிருந்தால் அவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வழங்கப்படும்.

8.உறுப்பினர்களிடம் இருந்து பெறப்படும் சந்தா தொகையில் 50 சதவீதம் தொகையை வங்கியில் சேமித்து வைக்கவோ அல்லது டெபாசிட் செய்து வைத்து இதிலிருந்து சங்க உறுப்பினர்களுக்கு சிறு, மருத்துவ உதவி வழங்குவது தொடர்பாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

9. உறுப்பினர்கள் சிறு மருத்துவ உதவி பெற தொடர்ந்து மூன்று ஆண்டுகள் ரெனிவலில் உள்ளவர்களின் தகுதி அடிப்படையில் (விபத்துக்கு மட்டும்) 5,000ரூபாய் வழங்க ஒப்புதல் பெறப்பட்டது.

10. நமது சங்கத்தின் அதிகாரபூர்வ இதழான CVPA NEWS ஐ பிரிண்ட் மீடியாவில் வெளியிடுவதை தவிர்த்து விட்டு, இனி PDF பதிவாக மட்டும் சங்க உறுப்பினர்களின் மொபைல் ஃபோன் வாட்ஸ்அப்பில் மட்டும் வெளியிடுவது என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11. சங்கத்தில் இணையும் புதிய உறுப்பினர்களின் வயது வரம்பு 21 வயது தொடங்கி 45 வயது வரை நிர்ணயிப்பது தொடர்பான தீர்மானத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டது. இது தொடர்பாக நிர்வாக குழு மற்றும் செயற்குழுவிற்கு அதிகாரம் வழங்கி பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

12. தொடர்ந்து சங்கத்தில் ரெனிவல் செய்து வரும் உறுப்பினர்களைத் தவிர , தேர்தல் நடத்துவதற்கு ஒரு வருடம் முன்பாகவே புதிய உறுப்பினர் சேர்த்தல் நிறுத்தப்படும். குறிப்பாக அந்த காலகட்டத்தில் மூன்று வருடம் கழித்து அல்லது ஐந்து வருடம் கழித்து விட்டுப் போன ரினிவலை செய்ய வரும் பட்சத்தில், அந்த உறுப்பினரின் அப்போதைய வயது அடிப்படையில்தான், அவர் சங்கத்தில் உறுப்பினராக நீடிப்பது தொடர்பாக சங்க நிர்வாகிகளே முடிவெடுக்கும் அதிகாரத்தை இப்பொதுக் குழுவில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

13. நமது சங்கத்தில் இருந்து வெளியேறி புதிய போட்டி சங்கம் தொடங்கி அந்த சங்கத்தில் நமது சங்கத்தை சேர்ந்த உறுப்பினர்கள், எந்த ஒரு பொறுப்பில் இருந்தாலும், அவர்கள் சங்க விதிமுறைகளுக்கு உட்பட்டு, எவ்வித முன் அறிவிப்பும் இன்றி சங்கத்தில் இருந்து நீக்கும் அதிகாரத்தை நிர்வாக குழுவுக்கு வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

14. தற்போது நமது சங்கத்தின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்க தேர்தல் நடைபெற்று வருகிறது. இது இனி வரும் காலங்களில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை சங்க தேர்தல் நடத்துவது என மாற்றி அமைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

15. சங்க உறுப்பினர்கள் விபத்தில் உயிரிழக்க நேரிட்டால், அவர்களுக்காக இதுவரை செய்யப்பட்டு வந்த விபத்து காப்பீடு முற்றிலும் ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

16. நமது சங்க அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றம் செய்ய லீஸ் அடிப்படையில் 15,00,000 லட்சம் ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்து கொள்ள இந்த பொதுக்குழுவில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதற்கு தேவையான நிதியை வங்கியில் நமது சங்க கணக்கில் உள்ள பிக்செட் டெபாசிட் தொகையை பயன்படுத்திக் கொள்ள பொதுக்குழுவில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

## முக்கிய அறிவிப்பு : -

அடுத்த வருடம் 2024 நமது சங்கத்தின் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், நடந்து முடிந்த ( 2023) பொதுக்குழு தீர்மானத்தின்படி, ஒரு வருடத்திற்கு முன்னதாகவே, புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், மற்றும் நீண்ட காலமாக இடைவெளி விட்டு ரெனிவல் செய்யாமல் இருக்கும் உறுப்பினர்களின், ரெனிவல் செய்வது போன்றவை பொதுக்குழு தீர்மானப்படி நிறுத்தப்பட வேண்டும். ஆனால் , சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று , அவர்களுக்கு அவகாசம் அளிக்கும் வகையில் வருகின்ற 2023 செப்டம்பர் மாதம் நடைபெறும் ரெனிவலை, அவர்கள் தங்கள் அடையாள அட்டையை ரெனிவல் செய்து கொள்ள கடைசி வாய்ப்பு பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வாய்ப்பை தவற விடுபவர்கள் அடுத்த 2024 ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பிறகுதான் இதற்கான வாய்ப்பு கிடைக்கும். எனவே இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் நீண்ட காலமாக விட்டுப் போன ரினிவலை செய்து கொள்ளுமாறு சங்க உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அதே சமயம் அந்தந்த காலாண்டு ரெனிவல் முடியும் சங்க உறுப்பினர்கள், அவர்கள் தொடர்ந்து விடுபடாமல் தங்களுடைய ரெனிவலை செய்து கொள்ளலாம். அவர்களுக்கு இதில் எந்த பிரச்சனையும் இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பு:

**2023 பொதுக்குழுவின் தீர்மானப்படி , மாற்றி அமைக்கப்பட்ட உறுப்பினர்களின் சந்தா தொகை விபரம்.**

**புதிய உறுப்பினர் சந்தா தொகை: 1500.00 ரூபாய்.**

**ஒவ்வொரு ஆண்டும் ரினிவல் செய்யும் உறுப்பினர்களின் ஆண்டு சந்தா தொகை: 1000.00 ரூபாய்.**

**ஆயுட்கால உறுப்பினர்கள் சந்தா தொகை: 15,000.00 ரூபாய்.**

இப்படிக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| S. செல் செல்வம் | D.M. பிரேம்குமார் |